**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**

**<u>திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.140/19</u>**

2024-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.காமாட்சி, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திருமதி.பெ.சீதாதேவி, மூன்றாம் நிலை மேசை எழுத்தர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | திருமதி.காமாட்சி. |
| வயது | - | 50 |
| தந்தை/கணவர் பெயர் | - | க/பெ.கோதண்டம் |
| கிராமம் | - | கீழ்புதூர் |
| வட்டம் | - | |
| சாதி | - | |
| சமயம் | - | |
| தொழில் | - | |

<u>14.08.2024</u>

<u>வா.சா.1.</u>

என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை எனக்கு படித்து காண்பித்தார்கள். நான் அதில் கையொப்பம் இட்டேன். **(7ம் பிரதிவாதி பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 09.03.2019 தேதியிட்ட அசல் வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (வாதி பெயரில் உள்ள ஆதார அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (17.09.2009 தேதியிட்ட 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது ) ( 03.08.2011 தேதியிட்ட 1 முதல் 4 வரையிலான**

**பிரதிவாதிகள் மற்றும் 7ம் பிரதிவாதி ஆகியோர்களுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (16.03.2019 தேதியிட்ட வாதி அனுப்பியுள்ள வழக்கறிஞர் அறிவிப்பின் உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (03.04.2019 தேதியிட்ட வாதி, 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கு அனுப்பியுள்ள பதில் அறிவிப்பு உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (1ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (3ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (7ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு 2ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப அனுப்பப்பட்டுள்ள அஞ்சல் உறை வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு 4ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப அனுப்பப்பட்டுள்ள அஞ்சல் உறை வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு 5ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப அனுப்பப்பட்டுள்ள அஞ்சல் உறை வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு 6ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப அனுப்பப்பட்டுள்ள அஞ்சல் உறை வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மேற்கொண்டு ஆவணங்கள் குறியீட்டிற்காக வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது.